


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – 2025 நிறைவு விழாவில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்களை வெளியிட, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு பெற்றுக் கொண்டார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தரூர், அமெரிக்க எழுத்தாளர் தாமஸ் ஹிடோஸி ப்ருக்ஸ்மா, இத்தாலி பொலோனியா புக் ப்ளஸ் இயக்குநர் திருமதி ஜாக்ஸ் தாமஸ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது நூலக இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இந்தியா மற்றும் பன்னாட்டு பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – 2025 நிறைவு விழாவில், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தூதர் விருது. உலகளாவிய தொலைநோக்கு டிஜிட்டல் புத்தக கண்காட்சி சிறப்பு விருது, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா– பண்டைய தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – நவீன தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – கூட்டு வெளியீட்டு கூட்டாண்மை விருது, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – பன்னாட்டு மானியக் குழுவின் சிறப்பு விருது, புத்தக ஊக்குவிப்பு விருது, உலகளாவிய இலக்கிய ஆதரவிற்கான விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தரூர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, அமெரிக்க எழுத்தாளர் தாமஸ் ஹிடோஸி ப்ருக்ஸ்மா, இத்தாலி பொலோனியா புக் ப்ளஸ் இயக்குநர் திருமதி ஜாக்ஸ் தாமஸ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. வியோனி, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது நூலக இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இந்தியா மற்றும் பன்னாட்டு பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – 2025 நிறைவு விழாவில் கலந்து கொண்டு, வெளிநாட்டு பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தரூர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது நூலக இயக்குநர் முனைவர் பொ. சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – 2025 நிறைவு விழாவில், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தூதர் விருது, உலகளாவிய தொலைநோக்கு டிஜிட்டல் புத்தக கண்காட்சி சிறப்பு விருது, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா– பண்டைய தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – நவீன தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – கூட்டு வெளியீட்டு கூட்டாண்மை விருது, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – பன்னாட்டு மானியக் குழுவின் சிறப்பு விருது, புத்தக ஊக்குவிப்பு விருது, உலகளாவிய இலக்கிய ஆதரவிற்கான விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தரூர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, அமெரிக்க எழுத்தாளர் தாமஸ் ஹிடோஸி ப்ருக்ஸ்மா, இத்தாலி பொலோனியா புக் ப்ளஸ் இயக்குநர் திருமதி ஜாக்ஸ் தாமஸ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது நூலக இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இந்தியா மற்றும் பன்னாட்டு பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2025 !

முதல் பக்கத் தொடர்ச்சி

பென்குயின் ரேண்டம் ஹவுஸ், ஹார்ப்பர் ஹாலின்ஸ், ஹெஷட் (Hachette), ரௌட்லட்ஜ் (Routledge), ப்ளூம்ஸ்பெர்ரி (Bloomsbury) போன்றவற்றுடன் இணைந்து பல்வேறு கூட்டு வெளியீடுகளை (Copublications) குறிப்பாக தமிழ் இலக்கியங்களை தமிழ்நாட்டு வரலாற்றை தமிழர் பண்பாட்டை ஆங்கில மொழி மொழிபெயர்ப்புகள் வாயிலாக உலகெங்கும் கொண்டு சேர்க்கும் பணியினை சிறப்பாகச் செய்து வருகிறது.

**30 நூல்களை முதல்வர் வெளியிட்டார்!**

அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா நிறைவு விழாவில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்கள் மற்றும் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கான மொழிபெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இந்த ஆண்டு நடைபெற்ற சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் 1125 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதில் தமிழ்மொழியிலிருந்து அயலக மொழிகளுக்கு 1005 ஒப்பந்தங்களும் அயலகமொழிகளிலிருந்து தமிழ் மொழிக்கு 120 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. குறிப்பாக அரபிக் மொழிக்கு 33 ஒப்பந்தங்களும், பிரெஞ்ச் மொழிக்கு 32 ஒப்பந்தங்களும், மலாய் மொழிக்கு 28 ஒப்பந்தங்களும் கையெழுத்தாகியுள்ளன.

மேலும், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா நிறைவு விழாவில், முதலமைச்சர் அவர்கள், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தூதர் விருதினை PWB Global Ambassador, ASEAN Publishing Association, African Publishers Network (APNET), Francophone Ambassador ஆகிய பதிப்பகம் மற்றும் அமைப்பிற்கும், உலகளாவிய தொலைநோக்கு டிஜிட்டல் புத்தக கண்காட்சி சிறப்பு விருதினை ரியாத் புத்தக கண்காட்சிக்கும், பண்டைய தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருதினை திரு. தாமஸ் ஹிடோஷி புருக்ஷிமா (Thomas Hitoshi Pruiksma) மற்றும் பேராசிரியர் டாக்டர் அருள்சிவன் ராஜு ஆகியோருக்கும்,

நவீன தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருதினை கிறிஸ்டியன் வியிஸ் (Christian Weiss) மற்றும் திரு.கே.எஸ். வெங்கடாசலம் ஆகியோருக்கும், கூட்டு வெளியீட்டு கூட்டாண்மை விருதினை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பதிப்பகத்திற்கும், பன்னாட்டு மானியக் குழுவின் சிறப்பு விருதினை துருக்கி நாட்டின் TEDAவிற்கும், புத்தக ஊக்குவிப்பு விருதினை மங்கோலியா மேஜிக் பாக்ஸ் மற்றும் இத்தாலி நாட்டின் கியூண்டி ஓடியன் புத்தக விற்பனை நிலையத்திற்கும் (Guinti Odeon Bookshop), உலகளாவிய இலக்கிய ஆதரவிற்கான விருதினை பொலானா குழந்தைகள் புத்தகக் கண்காட்சிக்கும் (Bologna Children's Book Fair) வழங்கி சிறப்பித்தார்.

இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தரூர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள், அமெரிக்க எழுத்தாளர் தாமஸ் ஹிடோஸி ப்ருக்ஸ்மா, இத்தாலி பொலோனியா புக் ப்ளஸ் இயக்குநர் திருமதி ஜாக்ஸ் தாமஸ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திரு.திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது நூலக இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இந்தியா மற்றும் பன்னாட்டு பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி சார்பில் தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழிவகுத்த பென்னிகுக் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை பொதுப்பணித்துறை அலுவலகம் முன்பாக உள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினர். காவேரி சொக்கலிங்கம் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மா. ஒச்சுபாலு, மூவேந்திரன், ராகவன், சௌந்தரராஜன், வைகை பரமன், பி.டி. மணிமாறன், ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், ஆர்.எம்.முத்து, சுதன், மதிவெங்கடேஷ், புண்ணியமூர்த்தி, அறிவு நிதி, பி.கே. செந்தில், பரவை ராஜாமணி, புதூர் முத்து, காத்தவராயன், அண்ணாதுரை, விருமாண்டி, கௌதம் காவேரி மணியன், மூர்த்தி, மருதுபாண்டி உள்ளிட்ட திரளான கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## நான்கு நாட்கள் 18 இடங்களில் நடைபெற்றது!

# சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா!

## ஒவ்வொரு நாளும் 75,000 பேர் நேரில் கண்டு களித்தனர்!

சென்னை, ஜன. 19-

சென்னையில், தை மாதம் தொடக்கத்தில் பொங்கல் நாட்களில் கலை பண்பாட்டுத்துறை சார்பில் சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா என்கிற பிரம்மாண்ட கலைவிழா கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டின் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகளை சென்னையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.1.2025 அன்று மாலை 6.00 மணியளவில் கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ,ரா நெடுஞ்சாலையியில் உள்ள ஏகாம்பர நாதர் திடலில் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியம், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தூத்துக்குடி நாடளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மாநகர மேயர் ஆர். பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 260 கலைஞர்கள் பிரமாண்ட மேடையில் வழங்கிய நிகழ்ச்சியினை முழுவதும் கண்டு களித்து, நிகழ்ச்சி நடத்திய கலைஞர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி பாராட்டினார். தொடக்கவிழா நிகழ்ச்சியினை 5000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நேரிலும், இணையம் மற்றும் தொலைக்காட்சி வாயிலாக 1,00,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

'சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா' கலை நிகழ்ச்சிகள், பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, ராஜா அண்ணாமலைபுரம் அரசு இசைக்கல்லூரி வளாகம், திருவல்லிக்கேணி பாரத சாரண சாரணியர் திடல், கிண்டி கத்திபாரா சந்திப்பு, ஜாபர்கான்பேட்டை மாநகராட்சி விளையாட்டுத் திடல், தியாகராய நகர் நடேசன் பூங்கா, நுங்கம்பாக்கம் மாநகராட்சி விளையாட்டுத் திடல், எழும்பூர் அரசு அருங்காட்சியகம், கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ,வெ,ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்திடல், ராயபுரம் ராபின்சன் பூங்கா, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா, அண்ணாநகர் கோபுரப் பூங்கா, கோயம்பேடு ஜெய் நகர் பூங்கா, கே.கே.நகர் சிவன் பூங்கா, வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், கொளத்தூர் மாநகராட்சி விளையாட்டு மைதானம், அம்பத்தூர் எஸ்.வி. விளையாட்டுத் திடல் ஆகிய 18 இடங்களில் 14.1.2025 முதல் 17.1.2025 வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெற்றது.

சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழாவில்' தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள 1000க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்றனர். நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைசிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், கோலாட்டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன் கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இத்துடன் புகழ்பெற்ற 8 பரதநாட்டிய குழுக்கள், 8 குரலிசை குழுக்கள், 16 இசைக்குழுக்கள் கேரளாவின் தைய்யம் நடனம், மகாராஷ்டிராவின் லாவணி நடனம், ராஜஸ்தான் கூமர் நடனம், மேற்கு வங்காளம் தனுச்சி நடனம், கோவாவின் விளக்கு நடனம், உத்ராகண்ட்டின் சபேலி நடனம் ஆகிய அயல் மாநில கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நிகழ்ச்சியின் இறுதி நாளான 17.01.2025 அன்று அண்ணாநகர் கோபுர பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

புரிசை சம்பந்த தம்பிரான் குழுவினரின் தெருக்கூத்து, விழுப்புரம் மாற்றுதிறனாளிகள் கலைக்குழுவினரின் மல்லர் கம்பம், உள்ளிட்ட நிகழ்ச்சிகளை கண்டு ரசித்து கலைஞர்களுக்கு பொன்னடை அணிவித்து பாராட்டினார்கள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து கலைஞர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நாளொன்றுக்கு ரூ.5000/ வீதம் மதிப்பூதியம் அளிக்கப்பட்டது. அனைத்து கலைஞர்களுக்கும் போக்குவரத்து வசதி, உணவு வசதி இவற்றுடன் இரண்டு புதிய ஆடைகள் மற்றும் அனைத்து கலைஞர்களுக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டன.

விழா நடைபெற்ற இடங்களில் பிரபல உணவகங்களின் சுவையான பராம்பரிய உணவு வகைகள் விற்பனை செய்யும் உணவு திருவிழாவும் நடத்தப்பட்டது. பூம்புகார் நிறுவனத்தின் வாயிலாக கைவினைப்பொருட்கள் விற்பனைக்கூடங்களும் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி மகிழும் வாய்ப்புகளும் பார்வையாளர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சென்னை சங்கமம் நிகழ்ச்சியினை திரளான பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புதுறையின் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் நேரலையிலும், யூடியூப் வாயிலாக இணையத்திலும் ஒளிபரப்பப்பட்டது. 18 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நாளும் 75000 க்கும் மேற்பட்டவர்கள் நேரில் கண்டு களித்தனர். முகநூல், இன்ஸ்டாகிராம், எக்ஸ் தளம், யூடியூப் வாயிலாக இலட்சக்கணக்கான மக்கள் இந்நிகழ்ச்சிகளை கண்டு களித்துள்ளனர்.

சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியைத் தொடர்ந்து கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் ஆகிய எட்டு நகரங்களிலும் இந்த ஆண்டு சங்கமம்நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.




தமிழர் திருநாள் பொங்கல் திருநாளை முன்னிட்டு திருப்புவனம் மேற்கு ஒன்றியம். கழுகேர்கடை. கிராமத்தில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. சிவகங்கை மாவட்டக் கழக துணை செயலாளர். திருப்புவனம் பேரூராட்சி மன்ற சேர்மன் சேங்கைமாறன் கழக கொடியை ஏற்றி வைத்தார். ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன் இனிப்பு பொங்கல்களை பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி. பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். மாவட்ட பிரதிநிதிகள் ஈஸ்வரன். சுப்பையா. மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் சேகர். ஒன்றிய துணைச் செயலாளர் மகேந்திரன். மீனாட்சி சுந்தரம். தொண்டரணி ராஜா. மீனவரணி அண்ணாமலை . பாலகிருஷ்ணன். கழுகேர் கடை முகமதுஷெரிப்.பாரி. முத்துராஜா. மற்றும் கிராம கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.